

நகர் ஊரமைப்புத்துறை (DTCP) தஞ்சாவூர் மாவட்டம்

புதுப்பட்டி ஊராட்சி

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ.எண்கள்: **25/1D1,1D2,1E,1F,** -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான மனைகள் அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1அங்குலம் = 33அடி (1:400)

ONLINE APPLICATION NO : XZQEAB0Y (40887)

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : **31150.00** ச.மீ
சாலையின் பரப்பு : **8814.82** ச.மீ
மீதமுள்ள மனையிடத்தின் பரப்பு : **31150.00** ச.மீ **- 8814.82** ச.மீ **= 22335.20** ச.மீ
கோரிய மனைகள் : **119**
ஒதுக்கிய மனைகள் (Regular) : **73**
ஒதுக்கிய மனைகள் (EWS) : **39 -** மனை எண்கள் - 22 முதல் 54,70 முதல் 75 = **2300.55** ச.மீ **(10.30 %)**
மொத்த மனைகள் : **112**

மனைப்பிரிவின் எல்லை
நிலையிலுள்ள சாலை

பொதுஒதுக்கீடு:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

பூங்கா - 1 : **946.63** ச.மீ
பூங்கா - 2 : **1304.18** ச.மீ
: **2250.81** ச.மீ **(10.07 %)**

Ⓐ பொது உபயோகம் : **118.46** ச.மீ **(0.53 %)**

மனைப்பிரிவு சாலை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

Ⓑ பொது உபயோகம் : **115.57** ச.மீ **(0.52 %)**

கட்டிட வரம்பு : சாலையின் அகலம் 9.0மீ. வரை 1.50மீ, சாலையின் அகலம் 9.0மீ. முதல் 18.0மீ. வரை 3.0மீ சாலையின் அகலம் 18.0மீ. முதல் 30.5மீ. வரை 4.5மீ சாலையின் அகலம் 30.5மீ க்கு மேல் 6.00மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்

மூலை முடக்கு : 7.20மீ முதல் 12.0மீ வரையிலான சாலைக்கு 1.50 X 1.50மீ 12.0மீ முதல் 30.5மீ வரையிலான சாலைக்கு 4.50 X 4.50மீ 30.5மீ க்கு மேல் 6.0X6.0மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்..
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
3. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்
5. The Tamil nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority.
6. அரசாணை எண்.18(ம)16 ந. நி(ம)கு. வ. துறை நாள். 04.02.2019 (ம) 31.01.2020-ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.
7. அரசாணை எண்.181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி (UD4 (1)) துறை நாள்:09.12.2020-ன் படி உள்ளாட்சிக்கான சாலை, பொது உபயோக ஒதுக்கீடு ஆகியன தானபத்திரம் ஆவண எண். 1372/2025 நாள். 20.05.2025 மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான பொது உபயோக ஒதுக்கீடு ஆகியன தானபத்திரம் ஆவண எண். 1373/2025 நாள். 20.05.2025 -ன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
8. அரசாணை எண்.141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி (UD4(1)) துறை நாள்:16.07.2022.
9. இம்மனைப்பிரிவின் எல்லையினை ஒட்டி நீரநிலை இருப்பின் புலவரைபடத்தின் படி நிலை நிறுத்தப்பட வேண்டும்.
10. இம்மனைப்பிரிவு தொடர்பாக வழக்கு இருந்தால் இந்த மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல
11. இம்மனைப்பிரிவில் அமையும் EWS மனை எண்: 22 - 54, 70 -75 வரை உள்ள மனைகளை ஒருங்கிணைப்பு செய்யக்கூடாது.
12. பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3வருடங்களுக்கு மேலாகியும் மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020-ன்படி **EWS** மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

ம. வ/ந. ளள. உ. இ.(த.மா)எண்:SWP/38/2025

(e-signed)
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்

Signature valid
Signed by: Assistant Director
Location: Thanjavur
Date: 2025.05.27 [illegible]

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Thanjavur
Date: 2025.06.12 [illegible]